## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

### *16th மார்ச் / March 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service*

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. ராஜம் சுரேஷ்**<br>Mrs. Rajam Suresh |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. ராஜம் சுரேஷ்**<br>Mrs. Rajam Suresh |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### இயேசுநாதர் ஐங்காயத்தை

*1. இயேசுநாதர் ஐங்காயத்தை*
*நோக்கிப் பார்த்தால்*
*நித்திய ஜீவனைப் பெற்றுக்*
*கொள்வாய்.*
*பாவி! பிராணனைத் தந்துன்னை*
*மீட்டவரை*
*நம்பி வந்து அண்ணாந்து*
*பார்ப்பாய்.*

***பார்! பார்! நோக்கிப்பார்!***
***இயேசுநாதர் ஐங்காயத்தை***
***நோக்கியே பார்!***
***நித்திய ஜீவனைப் பெற்றுக்***
***கொள்வாய்.***

*2. பாவப் பாரத்தைத் தாங்கிள*
*இரட்சகரால்*
*உந்தன் குற்றங்கள்*
*நீங்கினதே!*
*ஜீவ நாயகர் சிந்தின*
*இரத்தத்தினால்*
*பாவக்கடனும்*
*தீர்ந்தாயிற்றே.*

*3. எந்தக் கிரியைகள் ஜெபங்கள்*
*கண்ணீர்களும்*
*உன்னை இரட்சிக்க*
*மாட்டாதே. பார்!*
*திரு இரத்தமே தஞ்சம்*
*என்றோடி வந்தால்*
*வல்ல மீட்பர் கடாட்சஞ்*
*செய்வார்.*

*4. பிராயச் சித்தத்தின்*
*கிரியைகள் முடிந்ததே*
*என்று ஆண்டவர்*
*வாக்களித்தார்.*
*சர்வலோகத்தின் மீறுதல்*
*பாவங்களைச்*
*சிலுவையில் நிவர்த்தி*
*செய்தார்.*

| | |
|---|---|
| ✝ ***மாறி வாசித்தல் 11ம் ஞாயிறு***<br>"சங்கீதம் 32" | ***சபையார் இணைந்து***<br>Congregation |

"தேவனின் மன்னிக்கும் கிருபை"

**Psalter Reading "Psalm 32"**

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### உம்மைப்போல் யாருண்டு

**உம்மைப்போல் யாருண்டு எந்தன் இயேசு நாதா**
**இந்தப்பார்தலத்தில் உம்மைப்போல் யாருண்டு**

**பாவப்பிடியினில் சிக்கி நான் உழன்றேன்**
**தேவா தம் அன்பினால் மன்னித்தீர்**

*1. உலகம் மாமிசம் பிசாசுக்கடியில்*
அடிமையாகவே பாவி நான் ஜீவித்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம் போல் நடந்தேன் ஏமாற்றம் அடைந்தேன்

என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
அடிமை உமக்கே இனி நான்

*2. இன்றைக்கு நான் செய்யும் இந்த தீர்மானத்தை*
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்
நொறுக்கும் உருக்கும் உடையும் வளையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்

ஐம்பொறிகளையும் உமக்குள் அடக்கும்
இயேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய் திகழ

*அக்கினி என் உள்ளம் இறக்கும்*

*3. வீட்டிலும், ஊரிலும் செல்லுமிடமெங்கும்*
*சோதனை வந்திடில் கர்த்தா நீர் காத்திடும்*
*மேசியா வருகை வரையில் பவரை*
*சிலுவைக் கருகில் அழைக்க ஏவிடும்*

*முழங்காலில் நிற்க, வேதத்தை அறிய*
*தினந்தோறும் தேவா உணர்த்தும்*
*உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்*
*என்றுமே வராமல் காத்திடும்*

† ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

† ***திருமறைப் பாடம்*** — ***மிஸ். லீனா தனபாலன்***
***யோவான் 3 : 1 - 17*** — Miss. Leena Dhanapalan
Scripture Reading
John 3 : 1 - 17

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

† ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

***<u>சிலுவை சுமந்த உருவம்</u>***

***சிலுவை சுமந்த உருவம்***
***சிந்தின இரத்தம் புரண்டோடியே***
***நதிபோலவே பாய்கின்றதே***
***நம்பி இயேசுவண்டை வா (2)***

*1. பொல்லா உலக சிற்றின்பங்கள்*
*எல்லாம் அழியும் மாயை*
*காணாய் நிலையான சந்தோஷம்*
*பூவில்*
*கர்த்தாவின் அன்பண்டைவா*

*2. ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்*
*ஆத்மம் நஷ்டமடைந்தால்*
*லோகம் முழுவதும்*
*ஆதாயமாக்கியும்*
*லாபம் ஒன்றுமில்லையே*

*பாசமாய் மீட்க வந்தார்*
*பாவப் பரிகாரி கர்த்தர் இயேசு*
*நாதர்*
*பாவமெல்லாம் சுமந்தார்*

*4. நித்திய ஜீவன்*
*வாஞ்சிப்பாயோ*
*நித்திய மோட்ச வாழ்வில்*
*தேடி வாராயோ பரிசுத்த*
*ஜீவியம்*
*தேவை அதை அடைவாய்*

*5. தாகமடைந்தோர்*
*எல்லோருமே*
*தாகத்தைத் தீர்க்க வாரும்*

*3. பாவ மனித ஜாதிகளைப்*
*ஜீவத் தண்ணீரான கர்த்தர் இயேசு*
*நாதர்*
*ஜீவன் உனக்களிப்பார்.*

***அறிவிப்புகள்***
Announcements

† ***<u>மனப்பாட வசனங்கள்</u>*** — ***சபையார் இணைந்து***
***<u>Memory Verses</u>*** — Congregation

***லூக்கா 9 : 23***
Luke 9 : 23

***23. பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.***

† ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

† ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

† ***சபையார் நிற்கவும்*** **/ Indicates Congregation standing**